2015 செப்டம்பர் 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

விரயத்தைத் தவிர்த்து, பொதுமக்களும், வாகன உரிமையாளர்களும் பல்வேறு சேவைகளை உடனுக்குடன் பெறும் வகையில், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் திண்டுக்கல் மாவட்டம்—நத்தம், புதுக்கோட்டை மாவட்டம்—ஆலங்குடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம்—திருக்கழுகுன்றம் ஆகிய இடங்களில் புதிய பகுதி அலுவலகங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்காணும் அறிவிப்புகள், பொதுமக்கள் போக்குவரத்துத் துறையின் சேவைகளை எளிதில் பெறுவதற்கு வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் நேரடி நியமனம், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசுக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு, அண்ணா பல்கலைக்கழகம்மூலம் ஆளில்லா வான்வெளி வாகனம் வடிவமைத்தல் மற்றும் புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் தொடங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் எதிர்கால வளத்திற்கு வழிகாட்டியாக விளங்குவதும், இல்லை எனும் சொல்லை இல்லாததாக ஆக்கும் வலிமை பெற்றதும், (மேசையைத் தட்டும் ஒலி) சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் வழங்குவதுமான உயர் கல்வியை தமிழக மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்னும் நோக்கில், பல முனைப்பான நடவடிக்கைகளை கடந்த நான்காண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் பின்வரும் திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்:

1. கடந்த நான்காண்டுகளில் 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், கடந்த நான்காண்டுகளில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 959 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தரமான கல்வியை வழங்கும்

நோக்கிலும், மேற்குறிப்பிட்ட தேவைகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும்பொருட்டும், அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 611 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 533 விரிவுரையாளர் பணியிடங்கள் என மொத்தம் 1,144 உதவிப் பேராசிரியர்/விரிவுரையாளர் பணியிடங்கள் நேரடி நியமனம்மூலம் நிரப்பப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. அண்ணா பல்கலைக்கழகம் தற்போது பல்கலைக்கழக துறைகளை உள்ளடக்கிய 4 வளாகங்களையும், 13 உறுப்புக் கல்லூரிகளையும் மற்றும் 4 மண்டல அலுவலகங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அறிவியல் மற்றும் பொறியியல் சார்ந்த துறைகள் மிகச் சிறப்பு வாய்ந்த வளர்ச்சி நிலைக்கு உயர்த்தப்படும். மேலும், விடுதிகள், போக்குவரத்து வசதிகள், மைய நூலகங்கள், கணினி மையங்கள், சூரிய ஒளியில் இருந்து ஆற்றல் உருவாக்கும் அமைப்புகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இந்தப் பணிகள் 252 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இயற்கை பேரிடர் காலங்களில் மீட்புப் பணிகள் மற்றும் பாதுகாப்புப் பணிகள் போன்றவற்றை சிறப்புற மேற்கொள்ள ஆளில்லா வான்வெளி வாகனம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இவ்வாகனம் பாதிக்கப்பட்ட பகுதியை ஆய்வு செய்து, மதிப்பு மிகுந்த தகவல்களை தரவல்லது. இவ்வாகனத்தின் திறன்களை பயன்படுத்தி, அனுபவம் வாய்ந்த நிவாரணப் பணியாளர்கள் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள இயலும். அதேபோல், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் அபாயங்கள் ஆகியவற்றை கண்காணிப்பதற்கும் இது பயனுள்ளதாக அமையும். எனவே, ஆளில்லா வான்வெளி வாகனம்மூலம் தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கு சிறப்பான சேவையை அளிக்கும் வகையில், அண்ணா பல்கலைக்கழகம்மூலம் ஆளில்லா வான்வெளி வாகனம் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்படும். இத்திட்டத்திற்கென அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 20 கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 செப்டம்பர் 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11–55

4. பல்கலைக்கழகங்கள் சிறப்பாகச் செயல்பட, தரமான உட்கட்டமைப்பு வசதிகள் இருத்தல் வேண்டும். எனவே, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தப்படும்வகையில், 62 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வி மற்றும் நிருவாகக் கட்டடங்கள், வகுப்பறைகள், விடுதிகள், ஆய்வுக் கூடங்கள், கழிப்பறைகள் ஆகியவை கட்டப்படும். ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்கவும், இந்த நிதி பயன்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கடந்த 4 ஆண்டுகளில் 11 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மாணவர்கள் மற்றும் மாணவிகள் தொழில்நுட்பக் கல்வி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளுக்குத் தேவையான ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. மேலும், கணினிகள், அறைகலன்கள், நூல்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இல்லாத இடங்களில், இத்தகைய கல்லூரிகளைத் துவக்குவதன்மூலம் மாணவர்கள் மற்றும் மாணவிகள், நீண்டதூரம் பயணம் செய்து கல்வி பயிலும் நிலை தவிர்க்கப்பட்டு, அவர்கள் தொழில்நுட்பக்

கல்வி பெற இயலும். பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் மாணவிகள் தொழில்நுட்பக் கல்வி பெற்று, வேலைவாய்ப்பு பெற இது வழிவகுக்கும். எனவே, 5 புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. தமிழ்நாட்டில் 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் குறைந்த கட்டணத்தில் கல்வி வழங்கப்படுகிறது. 1957 ஆம் ஆண்டிற்குப் பிறகு, தமிழ்நாட்டில் அரசு கல்வியியல் கல்லூரி ஏதும் துவக்கப்படவில்லை. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்மூலம் 5 உறுப்புக் கல்வியியல் கல்லூரிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்காணும் அறிவிப்புகள், உயர் கல்வி பயிலும் ஏழையெளிய மாணவ, மாணவியர் தரமான கல்வியைப் பெறவும், அதன்மூலம் அவர்களது வாழ்வாதாரம் மேம்படவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்கான அறிவிப்புகள், பாசனத் திட்டங்கள், புதிய நீதிமன்றங்கள் உருவாக்குதல், போக்குவரத்துத் துறை மற்றும் உயர் கல்வித் துறை திட்டங்கள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அதுதான்டா வளர்ச்சி' என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், பட்டுக்கோட்டையாரினுடைய பாடலை ஒரு படத்தில் நடித்துக் காட்டினார். ஆளும் வளரணும், அறிவும் வளரணும் என்பதற்காக உரம் செறிந்த ஓர் உடலை வளர்க்க விளையாட்டுப் பயிற்சி